# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 434/2014**

**Deposition of Witness for PW1**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : தங்கமாயன் | | Caste | : |
| Father/Husband Name | : பாலுசாமி | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**( A1 died, A2, A3 present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 23.03.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.02.2012ம் தேதி காலை 15.00 மணிக்கு எழுமலை காவல் நிலையத்தில் இருந்து வாசிமலையான் கோவில் ஓடை வழியாக ரோந்து சென்ற போது TN 28 H 8663 அசோக் லேலண்ட் லாரியின் ஓட்டுநர் பெயர் மற்றும் விலாசம் கேட்டு தெரிந்த போது வத்தலக்குண்டை சேர்ந்த முருகேசன் ஆகும். மேற்படி வாகனத்தின் உரிமையாளர் நிலக்கோட்டைச் சேர்ந்த தவமணி , வத்தலக்குண்டை சேர்ந்த தங்கராசு லோடுமேன் ஆகியோர்கள் என தெரியவந்தது. பின்பு லாரி 2–1/2 யூனிட் மணல் அள்ளியதற்கு எந்த அரசு அனுமதி இல்லாமலும் எந்த ஆவணமும் இல்லாததால் அதே இடத்தில் அத்தாட்சி தயார் செய்ய அக்கம் பக்கத்தில் யாரும் இல்லாததால் நானும் காவலர் 1142 விஜியும் சாட்சியாக கையொப்பமிட்டு கைப்பற்றப்பட்ட சொத்தினை காவல்நிலையம் கொண்டு வந்து 16.00 மணிக்கு வழக்கு

பதிவு செய்ய சார்பு ஆய்வாளராளருக்கு உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் தனி வாகனத்திலும் சார்பு ஆய்வாளர் தனி வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். ஓடையில் மண் அள்ளிக்கொண்டிருக்கும்போது எதிரிகளை வாகனத்துடன் பிடிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஓடையில் தான் மணல் அள்ளிவந்தோம் என்று ஒப்புதல் வாக்குமூலம் சார்பு ஆய்வாளர் முன்னிலையில் வாங்கினோமா என்றால் வாங்கவில்லை. எதிரிகளை வாகனத்தோடு பிடித்த இடம் காட்டக்கூடிய வரைபடமோ பார்வை மகசரோ தயாரிக்கவில்லை என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் பிடிக்கப்பட்ட மணல் அரசு சொந்தமானது தான் என்பதற்கு ஆதரவாக கிராம நிர்வாக அலுவலரிடம் சென்று வாக்குமூலமோ சான்றோ பெறவில்லை என்றால் சரிதான். எதிரிகளை பிடித்த நிலையில் புகைப்படம் எடுத்தோமா என்றால் இல்லை. புள்ளிவிபர கணக்கிற்காக தமிழ்நாடு அரசை திருப்திப்படுத்துவதற்காக மணல் கடத்தலை தடுத்து செயல்படுகிறோம் என்பதை காட்டுவதற்காக சார்பு ஆய்வாளர் தயாரித்த அத்தாட்சியில் நான் கையெழுத்திட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.